DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 508/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | மங்கையர்கரசி |
| Father / Husband Name | தனசேகரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 05.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேல்சிலாவட்டம் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 29.12.2024 ம் தேதி இரவு 8.00 மணிக்கு எனது மகள் அர்ச்சனா வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வரும்போது ஆஜர் எதிரி குடித்துவிட்டு அசிங்கமாக பேசி கிண்டல் செய்ததாக என்னிடம் வந்து சொன்னார். நானும் என் கணவர் தனசேகரும் ஆஜர் எதிரியிடம் சென்று ஏன் என் மகளை கிண்டல் செய்கிறாய் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி நான் அப்படிதான் பேசுவேன் தேவிடியா என்று அசிங்மாக பேசி, என்னையா வந்து கேட்கிறாய் உன் மகளை ஆள் வைத்து தூக்குகிறேன் என்று மிரட்டினார். பின்னர் ஆஜர் எதிரி பார்த்தால் அடையாளம் தெரியாக்கூடிய 6 நபர்களை கூப்பிட்டுவந்து என்னையும், என் கணவரையும் அடித்தார்கள்.

2. பின்னர் நானும் என் கணவரும் என் மகளை அழைத்துவர எங்கள் ஊர் அரசமரத்தடியில் பிள்ளையார் கோவில் அருகே இருந்தபோது ஆஜர் எதிரி கட்டையால் என் கணவரின் தலையில் அடித்தார். தடுக்க சென்ற என்னை கையால் அடித்து கீழே தள்ளிவிட்டார். காயம்பட்ட என் கணவரை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். என் கணவர் மருத்துவமனையில் 2 நாள் சிகிச்சையில் இருந்தார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(எனது கையெழுத்துடன் கூடிய புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரி அசிங்கமாக பேசியதால் எனக்கு சாகும் அளவிற்கு மனஉளைச்சல் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**3.** 29.12.2024 ம் தேதி என் மகள் வந்து சொன்ன பிறகு நான் போய் கேட்டேன் என போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். புகார் எப்போது கொடுத்தேன் என்றால் 29.12.2024 அன்று கொடுத்தேன். புகார் கொடுத்த அன்றே போலிசார் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரணை செய்தார்கள். எதிரி பார்த்தால் அடையாளம் தெரியாக்கூடிய 6 நபர்களை கூப்பிட்டுவந்து என்னையும், என்

கணவரையும் அடித்தார்கள் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். என் கணவர் மது அருந்துவரா என்றால் எப்போதாவது குடிப்பார். சம்பவம் நடக்கும்போது அங்கு எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை. மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சுமார் 8–9 மணியளவில் சென்றோம்.

4. புகாரை யார் எழுதினார் என்றால் எனக்கு எழுதத்தெரியாது என் மகள் எழுதினார். புகாரில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் புகார் கொடுப்பதற்கு முன்பு என் கணவர் மதுபோதையில் எதிரியை இரும்பு ராடால் தாக்கிவிட்டார் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன அசிங்கமாக வார்த்தையை சொல்லி எதிரி திட்டினார் என போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரியை என் கணவர் தாக்கிய முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எதிரிக்கு எதிராக தவறான புகார் கொடுத்து அதில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 508/2025

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | தனசேகரன் |
| Father / Husband Name | சுப்புரமணி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 05.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேல்சிலாவட்டம் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 29.12.2024 ம் தேதி இரவு 8.00 மணிக்கு என் மகள் அர்ச்சனாவை அழைத்துவருவதற்காக நானும் என் மனைவி அ.சா.1-ம் சென்றபோது ஆஜர் எதிரி எங்களை பார்த்து கோத்தா உன் மகளை ஆள்வைத்து தூக்கிவிடுவேன் தேவிடியா பையா என்று அசிங்மாக பேசினார். நான் ஏன் அசிங்கமாக பேசுகிறாய் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி கீழே கிடந்த தடியை எடுத்து என் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். காயம்பட்ட என்னை என் மனைவி மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். என் தலையில் 5 தையல் போடப்பட்டது, 1 நாள் சிகிச்சையில் இருந்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தாரகள்.

**குறுக்கு விசாரணை**

2. என் மகளை அழைத்துவர எங்கு சென்றோம் என்றால் GST ரோட்டிற்கு சென்றோம். சம்பவம் GST ரோட்டில் நடந்தது என்றால் இல்லை, பிள்ளையார் கோவில் அருகே நடந்தது. சம்பவத்தின்போது அங்கு வேறு யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சுமார் 8-8.30 மணியளவில் சென்றோம். இந்த வழக்கு சம்பவம் நடப்பதற்கு முன்பு நான் எதிரியை இரும்பு ராடால் அடித்துவிட்டேன் என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன அதே அசிங்கமான வார்த்தைகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேனா என்றால் ஆமாம். போலிசார் என்னை 30ம் தேதி காலை 8-9 மணியளவில் விசாரித்தார்கள்.

3. மருத்துவமனையில் சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்பதை குறித்து கேட்டார்களா என்றால் கேட்டார்கள், 8 மணிக்கு நடந்ததாக சொன்னேன். பிள்ளையார் கோவில் அருகே கண்காணிப்பு கேமரா உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அங்கு கண்காணிப்பு கேமரா இல்லை. எதிரியை நான் தாக்கிய முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எதிரிக்கு எதிராக என் மனைவி தவறான புகார் கொடுத்து அதில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 508/2025

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | அர்ச்சனா |
| Father / Husband Name | தனசேகரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 05.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேல்சிலாவட்டம் கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். நான் தினமும் வேலைக்கு செல்லும்போதும் வரும்போதும் ஆஜர் எதிரி என்னை அசிங்கமாக பேசியும் ஒரு நாள் என்னை ஆள்வைத்து தூக்குவதாக சொன்னார், இதை நான் என் பெற்றோரிடம் சொன்னேன். 29.12.2024 ம் தேதி இரவு 8.00 மணிக்கு என்னை அழைத்துவருவதற்காக என் அப்பாவும், அம்மாவும் எங்கள் ஊர் பிள்ளையார் கோவில் அருகே இருந்தபோது ஆஜர் எதிரி குடித்துவிட்டு என் அப்பாவை கட்டையால் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தியதாக என் அப்பா என்னிடம் சொன்னார். பின்னர் காயம்பட்ட என் அப்பாவை நானும் என் அம்மாவும் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. 29.12.2024 அன்று எதிரி என்னை கிண்டல் செய்ததாக நான் என் அப்பா, அம்மாவிடம் சொன்னேனா என்றால் நான் போகும்போதும் வரும்போதும் எதிரி தொடர்ந்து கிண்டல் செய்வதாக நான் என் பெற்றோரிடம் சொன்னேன். எத்தனை மணிக்கு சொன்னேன் என்றால் எதிரி பலமுறை போகும்போதும் வரும்போதும் கிண்டல் செய்வார், தற்போது வரை அதை தொடர்ந்து செய்துவருகிறார். எனக்கு அவரை பார்த்தால் பயமாக தான் உள்ளது. பிரச்சணைக்கு பிறகு எதிரி என்னை பின்தொடர்வது தொடர்பாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் ஏற்கெனவே புகார் கொடுத்துள்ளதால் புகார் கொடுக்கவில்லை.

3. காயம்பட்ட என் அப்பாவை, நானும் என் அம்மாவும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பிள்ளையார் கோவில் எங்கு உள்ளது என்றால் NH ரோட்டிற்கு அருகே உள்ளது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

எதிரிக்கும் என் அப்பாவிற்கும் இடையேயான முன்விரோம் காரணத்தால் தான் என் அம்மா கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.